# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097174

1. District : மாவட்டம் புதுக்கோட்டை | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 5/2018 | Date: நாள் 27.9.18

2. (i) Act சட்டம்: IPC and Prevention of Corruption (amended) Act 2018 | Sections பிரிவுகள்: 468, 471, 477(A)
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 420 IPC and 13(1)(a)
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: r/w 13(2) of Prevention of Corruption (Amended) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 2012-2013 | Date to நாள் வரை 2013-2014
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.6.2015 | Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.9.2018 | Time : நேரம் 10.30 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக துவக்க கட்ட விசாரணை மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையில் தென்மேற்கு, ஆயங்குடி பெரிய கோட்டை கருப்பூர், [illegible] 70km தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P S
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Y. சாமுவேல் ஜெபஜோசுவா ராஜ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஜேசுதாஸ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1971 | (d) Nationality நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் அலுவலர் | (g) Address முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு புதுக்கோட்டை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி V. தேவி W/o விஸ்வநாதன்
முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், [illegible] ஊராட்சி
ஆவுடையார் கோவில் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
துவக்க கட்ட விசாரணை செய்யப்பட்டு உத்தரவின் பேரில்
வழக்கு பதிவு செய்யப்பட்டதால் காலதாமதம்

* GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது

நான் இன்று 27.09.218 ஆம் தேதி 10.30 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் பணியில் இருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரக உத்தரவு படி வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு:- புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுகா, செங்கானம் ஊராட்சி, இடையூர் கிராமத்தைச் சேர்ந்த தைனேஸ் மகன் D.அருள்மாணிக்கம் என்பவரது 05.05.2015 ஆம் தேதியிட்ட புகாரில் ஆவுடையார்கோவில் தாலுகா, செங்கானம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.தேவி க/பெ.விஸ்வநாதன் என்பவர், ஊராட்சிக்கு அரசால் கொடுக்கப்படும் நிதியை முறைகேடாக பயன்படுத்தி செயல்படுத்தாத பணிகளை செயல்படுத்தியதாக ஊராட்சி மன்றத் தலைவரே மேற்படி அருள்மாணிக்கத்தின் கையெழுத்தை போட்டு வங்கியில் பணத்தை எடுத்து மோசடி செய்ததாக சென்னை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்ட புகார் மனு மீது துவக்கக்கட்ட விசாரணை செய்யும்படி சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27.9.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 27.9.18 12 30hrs

Name: பெயர் ..............................
Rank: நிலை ..................No. எண் ..........

GCP-240-34(Type-2) 90.000 Cps -21.3.16(HCL-12)p 2

இயக்குநரக நமூனா எண்.PE.165/2015/RDP/HQ நாள்: 10.06.2015 படி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட மனு மீது துவக்கக்கட்ட விசாரணை அப்போதைய, புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு.பூமிநாதன் அவர்களால் மேற்கொண்டதில், 2013-2014 ஆம் ஆண்டு ரூ.85,509/- மதிப்பீட்டில் தென்னமாரி குடியிருப்பு கிராவல் சாலை அமைத்தல் பணி செய்ய, தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் மேற்கண்ட பணி செய்து முடித்ததாக ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்தும், செலவுச்சீட்டு எண்.83இன் படி, ஊராட்சி நிதிக் கணக்கு வைத்துள்ள திருபுனவாசல் கனரா வங்கி காசோலை எண்.48573 இன் மூலம் 10.01.2014 ஆம் தேதி மேற்கண்ட தொகை ரூ.85,509/-ஐ மேற்கண்ட பணியை செய்ததாக அரசு ஒப்பந்ததாரர் அல்லாத குற்றச்சாட்டப்பட்டுள்ள அலுவலர் திருமதி.தேவியின் அப்பா திரு.சுந்தரம் என்பவருக்கு பணப்பரிமாற்றம் ஆனதற்கு ஊராட்சி வங்கிக் கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் உள்ளது. மேலும் 2012-2013 ஆம் ஆண்டு ரூ.15,200/- மதிப்பீட்டில் ஆயக்குடி தாம்பு பதித்தல் பணி செய்ய, தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் மேற்கண்ட பணி செய்து முடித்ததாக ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்தும், செலவுச்சீட்டு எண்.49இன் படி, ஊராட்சி நிதிக் கணக்கு வைத்துள்ள திருபுனவாசல் கனரா வங்கி காசோலை எண்.98848 இன் மூலம் 03.11.2012 ஆம் தேதி மேற்கண்ட தொகை ரூ.15,200/-ஐ மேற்கண்ட பணியை தானே செய்ததாக குற்றச்சாட்டப்பட்டுள்ள அலுவலர் திருமதி.தேவியின் பெயரிலேயே பணப்பரிமாற்றம் ஆனதற்கு ஊராட்சி வங்கிக் கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் உள்ளது. மேலும் 2012-2013 ஆம் ஆண்டு ரூ.32,000/- மதிப்பீட்டில் தென்னமாரி சாலை தாம்பு பதித்தல் பணி செய்ய, தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் மேற்கண்ட பணி செய்து முடித்ததாக ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்தும், செலவுச்சீட்டு எண்.20இன் படி, ஊராட்சி நிதிக் கணக்கு வைத்துள்ள திருபுனவாசல் கனரா வங்கி காசோலை எண்.98819 இன் மூலம் 11.08.2012 ஆம் தேதி மேற்கண்ட தொகை ரூ.32,000/-ஐ மேற்கண்ட பணியை செய்ததாக அரசு ஒப்பந்ததாரர் அல்லாத குற்றச்சாட்டப்பட்டுள்ள அலுவலர் திருமதி.தேவிக்கு தெரிந்த நபர் ஏ.ஆர் நைனார் ஸ்டோர் உரிமையாளர் என்பவருக்கு அவருடைய வங்கி கணக்கு எண்.1570201004825-க்கு பணப்பரிமாற்றம் ஆனதற்கு ஊராட்சி வங்கிக் கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் உள்ளது. மேலும் 2012-2013 ஆம் ஆண்டு ரூ.14,700/- மதிப்பீட்டில் பேயடிக்கோட்டை கருப்பர் கோவில் சாலை தாம்பு பதித்தல் பணி செய்ய, தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் மேற்கண்ட பணி செய்து முடித்ததாக ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்தும், செலவுச்சீட்டு எண்.52இன் படி, ஊராட்சி நிதிக் கணக்கு வைத்துள்ள திருபுனவாசல் கனரா வங்கி காசோலை எண். 93252 இன் மூலம் 17.11.2012 ஆம் தேதி மேற்கண்ட தொகை ரூ.14,700/- ஐ

மேற்கண்ட பணியை தானே செய்ததாக குற்றச்சாட்டப்பட்டுள்ள அலுவலர் திருமதி.தேவியின் பெயரிலேயே பணப்பரிமாற்றம் ஆனதற்கு ஊராட்சி வங்கிக் கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் உள்ளது. மேலும் 2012-2013 ஆம் ஆண்டு ரூ.15,000/- மதிப்பீட்டில் செங்கானம் கல்லறை சாலை தூம்பு பதித்தல் பணி செய்ய, தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் மேற்கண்ட பணி செய்து முடித்ததாக ரொக்கப்பதிவேட்டில் பதிவு செய்தும், செலவுச்சீட்டு எண்.79இன் படி, ஊராட்சி நிதிக் கணக்கு வைத்துள்ள திருபுனவாசல் கனரா வங்கி காசோலை எண்.93283 இன் மூலம் 05.02.2013 ஆம் தேதி மேற்கண்ட தொகை ரூ.15,000/-ஐ மேற்கண்ட பணியை தானே செய்ததாக குற்றச்சாட்டப்பட்டுள்ள அலுவலர் திருமதி.தேவியின் பெயரிலேயே பணப்பரிமாற்றம் ஆனதற்கு ஊராட்சி வங்கிக் கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் உள்ளது. இவ்வாறாக மேற்கண்ட ஐந்து பணிகளையும் செய்யாமலேயே செய்ததாக குற்றமுறு எண்ணத்தில் பொய்யான ஆவணங்களை தயார் செய்து, எதிரி திருமதி.தேவி, முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர், செங்கானம் ஊராட்சி, ஆவுடையார்கோவில், புதுக்கோட்டை மாவட்டம் என்பவர் ரூ.1,16,900/- ஐ கையாடல் செய்துள்ளதாக தெரியவருகிறது. மேலும், மேற்கண்ட காசோலைகளில் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திரு.அருள்மாணிக்கம் என்பவரது கையொப்பத்தை குற்றச்சாட்டு அலுவலர் தேவியே கையொப்பம் செய்து பணம் பெற்றிருக்க வாய்ப்பிருப்பதாக தெரிய வந்ததின் பேரில் மேற்கண்ட எதிரியின் மீது குற்றவழக்கு தொடர முதல் நோக்கு நிலை முகாந்திரம் இருப்பதாக இயக்குநரகத்திற்கு அறிக்கை அனுப்பி வைத்ததன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக நமூனா எண். PE.165/2015/RDP/HQ நாள்:11.09.2018ன் படி மேற்கண்ட எதிரியின் மீது வழக்குப் பதிவு செய்ய உத்தரவு அனுப்பியதன் பேரில், இன்று 27.09.2018 காலை 10.30 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 05/2018 u/s 468, 471, 477(A), 420 IPC and 13 (1)(a) r/w 13 (2) of the Prevention of Corruption (Amended) Act 2018 இன் படி என்னால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

முதல் தகவல் அறிக்கையின் அசலை தலைமை குற்றவியல் நீதித் துறை நடுவர்/தனி நீதிபதி புதுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.